Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1939.

உ

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1869) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்.-கூஉ] யாழ்ப்பாணம்:- கரவரு ஐப்பசிமீ உ௦உ செவ்வாய்க்கிழமை (6 நவம்பர் 1951) [இல்.-ருஅ]

## 25,00,000 யார் ஆலைத்துணி விரைவில் வருமாம்

வியாபார உடன்படிக்கை செய்யப்பட்டாலன்றி இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படாதென இந்திய அரசாங்கத்தால் இதுகாறுந்தடுத்து வைக்கப்பட்ட ஆலைத்துணி 25 இலட்சம் யார் வரையில் இப்போது ஏற்றுமதியாக விருக்கின்றதாம். இத்துணியை இந்தியாவிடம் வாங்குதற்கு, ஏற்றுமதித்தடை விதிக்கப்பட்ட தினமாகிய ஆகஸ்ட் 28 ந் திகதிக்கு முன்னரே ஒழுங்குகள் செய்யப்பட்டுவிட்டனவாம். அதிஷ்டவசமாய் ஏற்றுமதித்தடை நீக்கப்பட்டதும் ஏற்கெனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இத்துணி ஏற்றுமதிசெய்யப்படுகிறதாம். இப்போது இலங்கையிற் குறைவாயிருக்கும் மேலங்கி, உள்ளங்கித்துணிகள், சாரிக்கன், வேட்டிகள் முதலியன வருகின்றனவென அறியப்படுகிறது. இவ்வாலைத் துணிகள் யப்பானிய துணிகளிலும்பார்க்கவிலை சகாயமானவையாம்; ஏற்றுமதியாக விருக்கும் 25 இலட்சம் யாரில் ஓர் பாகம் கப்பலில் ஏற்றப்படுகிறதெனவும், முழுவதும் நத்தார்ப் பெருநாளுக்கு முன் வந்துவிடுமெனவும் அறியப்படுகிறது. விலைகளில் அதிகம் இறக்கம் ஏற்படாதெனினும், துணிகள் அதிகமாகக் கிடைக்கக்கூடியதாயிருக்குமென வியாபாரிமார் அபிப்பிராயப்படுகின்றனர்.

## எருமைகளைக் கொல்லாது தடுக்க முயற்சி

இந்த இலங்கையிலே இறைச்சியின் பொருட்டு ஆடு மாடு எருமைகள் நாள்தோறும் பன்னூற்றுக் கணக்காகக் கொல்லப்படுதலினால், இவைகளுடைய எருவைப் பசளையாகக் கொண்டும், மாடு எருமைகளின் துணையைக்கொண்டும் பயிரிடுந் தொழிலை விருத்தி பண்ணுதல் கஷ்டமாயிருக்கிறதாம்; சிங்கள நாட்டு விவசாயிகளுக்கு எருமையின் சேவை இன்றியமையாததாகும்; இப்படிப்பட்ட அருமையான எருமைகள் நாட்டுப் புறத்திலிருந்து கொழும்பு முதலிய பட்டினங்களுக்கு நாள்தோறும் நூற்றுக் கணக்காக இறைச்சியின் பொருட்டு விலைக்கு வாங்கிக்கொண்டு போகப்படுகின்றனவாம்; கொழும்பு நகரில் மாத்திரம் மாசம் 700 எருமைகள் இறைச்சியின்பொருட்டுக் கொல்லப்படுகின்றனவாம்; காலமழையுங் குன்றிவர, மாடு எருமை முதலியனவும் பல்லாயிரக்கணக்காக இறைச்சியின் பொருட்டு வதைக்கப்பட, இவற்றாற் பயிரிடுந் தொழிலும் பெரிதுங் குன்றிவருகின்றதென்ற அச்சங் காரணமாக, பல கிராமங்களிலும் வசிக்கும் விவசாயிகள் முறையிட்டமையினால், இறைச்சியின் பொருட்டு எருமையை விற்கவொண்ணாது, கொல்லவொண்ணாது என்ற பிரமாணத்தை விதித்தற்கு அரசினர் யோசிக்கின்றார்களாம்.

உ

## தோத்திரம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாலினை மாலுற நின்றான் மலைமக டன்னுடைய
பாலனைப் பான்மதி சூடியைப் பண்புண ரார்மதின்மேல்
போலனைப் போர்விடை யேறியைப் பூந்துருத் திம்மகிழும்
ஆலனை யாதிபு ராணனை நாமடி போற்றுவதே.

பைக்கையும் பாந்தி விழிக்கையும் பாம்பு சடையிடையே
வைக்கையும் வானிழி கங்கையு மங்கை நடுக்குறவே
மொய்க்கை நாகனை யூன்றினன் பூந்துருத் தியுறையும்
மிக்கநல் வேத விகிர்தனை நாமடி போற்றுவதே.

— அப்பர் சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

## பகிரங்க விடுமுறை நாட்களிற் பெரும் மாறுதல்

இலங்கையிலுள்ள பிரதானமான நான்கு சமயங்கட்குரிய மக்களின் வேண்டுகோட்கிசைந்து அரசினர் இதுகாறுமுள்ள பிரசித்த விடுமுறை நாட்களை மாற்றிப் புதிய முறையிற் பின்வருமாறு அமைத்திருக்கின்றனர். புதிய விடுமுறை நாட்கள் 1952-ம் ஆண்டு தொடக்கமாகக் கொள்ளப்படுமாம்:—

1. புத்தாண்டுப் பிறப்பு ஜனவரி மாதம் முதற்றேதி மாத்திரம்.
2. தைப்பொங்கல் 1 நாள்; இந்து விடுமுறை நாள்.
3. 'துருது'' பூரணை, ஜனவரியில் நிகழ்வது; பௌத்தருக்குரியது
4. இலங்கைச் சுதந்திர நாள் (பெவர்வரி மீ 4 உ) 1. நாள். [1. நாள்.
5. மாசி மகா சிவராத்திரி (சைவர்கட்குரியது) 1. நாள்.
6. ஈஸ்டர் விடுமுறை நாள் வியாழன், வெள்ளி, சனி கிறீஸ்தவருக்
7. தமிழர் - சிங்களர் சித்திரை வருடப்பிறப்பு 5 நாள். [குரியது 3 நாள்.
8. பௌத்தர் விசாகம் 2. நாள்.
9. அரசர் பிறந்த தினம் (யூன் மாசத்தில்) 1. நாள்.
10. பௌத்தர் வெள்ளாசுததினம் 1. நாள்.
11. இஸ்லாமியர் ரமாஸன் தினம் 1. நாள்.
12. எஜாலா பூரணை (செப்டெம்பர் மாசத்தில் நிகழ்வது; பௌத்தருக்
13. இஸ்லாமிய ஹாஜி தினம் 1. நாள். [குரியது) 1. நாள்.
14. இஸ்லாமிய புத்தாண்டு (செப்டெம்பர் - அக்டோபர் மாசங்களில்
15. தீபாவளித்தினம் (இந்துக்களுக்குரியது) 1. நாள். [வருவது 1நாள்.
16. மகமது பிறந்த நாள் 1. நாள்.
17. "உன்டுவா" பூரணை (பௌத்தருக்குரியது) 1. நாள்.
18. நத்தார் தினம் (கிறீஸ்தவர்க்குரியது) டிசெம்பர்மீ. 25உ 1. நாள்.

இந்தப் புதிய ஒழுங்கின்படி இலங்கையிலுள்ள நான்கு சமயவாதிகளுட் பௌத்தர்கட்கு 7. நாள்; கிறீஸ்தவர்களுக்கு 5. நாள், இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் தனித்தனி நான்கு நாட்களாகும்.

## திருப்பூந்துருத்தித் தலச் சிறப்பு

திருப்பூந்துருத்தி என்பது சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள 11 வது தலம். திருவையாற்றினை உள்ளிட்ட சத்த "தலங்களுள் ] ஒன்று. இந்திரன், காசிபர் முதலியோர் பூசித்தது. துருத்தி - ஆற்றிடைக் குறை. பொன்னி வலங்கொண்ட திருப்பூந்துருத்தி" என்பது சேக்கிழார் வாக்கு. முன் ஆற்றிடைக்குறையாய் இருந்தது போலும். ஊது உலைமூக்கும் துருத்தி யெனப்படும். அதனை இலிங்கமாகப் பூசித்தமையின் அப்பெயர் போந்தது என்பாருமுளர். தென்கரையில் 37வது தலமாகிய குத்தாலம் என வழங்கும் திருத்துருத்தியின் இதுவேறு ஆதலின் திருப்பூந்துருத்தி என வழங்கப்பெறும்.

கைலையில் வீற்றிருக்கும் இறைவன் திருக்கோலத்தை தரிசிக்க விரும்பி நடந்தும், தாவியும், புரண்டும் உடல் தேய்ந்தும் உளந்தேயாத உரனுடையாராயிருந்து, இறைவன் அசரீரியாக அருளியபடி அங்கு ஒரு பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் ஒரு வாவியில் எழுந்து, கைலைக் கோலங்கண்டு தரிசித்து, இவ்வுலகமெல்லாம் சத்தியும் சிவமுமாம் தன்மையினை, "மாதர்ப் பிறைக் கண்ணியானை" எனத் தொடங்கும் பதிகமாகிய சொல் ஓவியத்தால் எல்லாரும் கண்டு தரிசித்து இன்புறச் செய்த நாவுக்கரையர் பெருமான், திருமடம் அமைத்துத் திருத்தொண்டு செய்துவாழ்ந்த இடம். அம்மடம்சிதைந்தநிலையில் இன்னும் காண உள்ளது.

மதுரையிற் சமணர்களை வாதில் வென்று 'சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம் தெய்வத்தின் மேற்றெய்வ மில்லை' என்னும் வாய்மையை விளக்கிப் புகழ்த்தம்பம் நாட்டி, போதிமங்கையில் வந்தெதிர்த்த புத்த சமயத்தவர்களையும் வாதில் வென்று சிறந்தனவும் சரிப்பனவும் சைவமேயாம் நிலைமையை விளக்கி வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத் துறை விளங்கவும் கண்டருளிய ஞானசம்பந்தப் பெருமான் திருப்பூந்துருத்திக்கு எழுந்தருளுவதைக் கண்டு அறிந்த அப்பர், ஒருவரும் அறியாதபடி சிவிகையைத் தாங்கிக் களித்து 'அப்பர் எங்குற்றார்?' என்ற அப்பெருமானுக்கு 'உம் அடியேன் உம் அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்தெய்தப்பெற்று இங்கு உற்றேன்' எனத் திருவாய் மலர்ந்து உண்மை அடியார்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை அநுட்டித்துக் காட்டிய தலம். மேலும் தென்னாட்டிலும் தொண்டை நன்னாட்டிலும் தங்கள் யாத்திரையின் நிகழ்ச்சிகளைச் சொல்லி அளவளாவி இன்புற்ற இடம். அப்பர் கைத்தொண்டு செய்த தலமாதலின் மிதிக்க அஞ்சிய பிள்ளையாருக்கு நந்தி விலகியதாகவுங் கூறுப. இன்று காட்சியிலும் உள்ளது. அம்மைக்குத் தனியே கோயில் உண்டு. இரண்டு பிராகாரங்களையுடையது. திருவையாற்றிற் போலவே மூலத்தானத்திற்கு இருபுறங்களிலும் தக்ஷிண உத்தர கைலாயம் என இரு சிறு கோயில்களும் உண்டு, தக்ஷிணாமூர்த்தி கையில் வீணையுடன் விளங்குகிறார். 'பண்ணார்ந்த வீணை பயின்றார் போலும்' என்பது இத்தலத் தாண்டகப் பகுதி.

சுவாமி: புஷ்பவனநாதர்; அம்மை: அழகார்ந்த நாயகி. இருப்பிடம்: இத்தலம் தஞ்சையிலிருந்து திருவையாற்றுக்குச் செல்லும் மார்க்கத்தில் உள்ள திருக்கண்டியூரினின்றும் மேற்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. அப்பர் இத்தலத்தில் அருளியதாகச் சேக்கிழாரால் குறிப்பிடப்படும் பதிகங்கள் பதினெட்டு.

—தருமபுர ஆதீன வெளியீடு 256

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ், கரஷூ ஐப்பசி மீ ௨௦ உ செவ்வாய்க்கிழமை

## :: தாய் மொழியை ::
## உழக்குதல் முறையா?

நாம் சிறுபிராயத்திலே கல்வி பயின்ற காலத்தில், கையில் வைத்திருந்த ஏடாக, புத்தகமாக, தவறி வீழ்ந்து காலிற் பட்டுவிட்டால், இல்லையேல் அபுத்திபூர்வமாக அவைகளைக் காலால் மிதித்துவிட்டால், உடனே அந்த ஏட்டையேனும் புத்தகத்தையேனுங் கையிலெடுத்துக் கண்களில் ஒற்றி, காலிற்பட, இல்லையேல் மிதிபடவிட்ட தவறுக்காகப் பச்சாத்தாபப்பட்டது முண்டு; இவற்றைக் காலிற்பட, அன்றேல் மிதியுண்ணவிட்டதாகிய பிழையை உபாத்தியாயர், பெற்றோர் பெரியோர்கண்டால், பெரிதுங்கடிந்து, சிறுபிள்ளைகளெனக் கண்டால், இப்பிழையின் பொருட்டுத் தலையில் உரககக் குட்டியும் விடுவார்கள்; ஏடுகள் புத்தகங்களாகிய இவைகளை இவ்வாறுபோற்றுங்குணம் தமிழ்மக்களிடத்தில் நீடித்த காலம் நிலைபெற்றிருந்தது; சிலர் கந்தபுராணத் திருமுறை, (ஏடு), தேவார திருவாசகத் திருமுறைகளை வைத்துச் சிவமாகப் பாவித்துத் தங்கள் ஆன்மார்த்த பூசைகளைச் செய்து வந்ததுமுண்டு. தமிழ் மறை யெனப்படுந் தேவார திருவாசகங்களும், ஏனைய அருட்பிரபந்தங்களும, புராணங்கள் இதிகாசங்களெல்லாம், எங்கள் தமிழ் அக்கரங்களால் அமைந்தனவல்லவா! இவைகளை வாழ்த்தும்போது, தெய்வப் புலமைத் திருவள்ளுவனர்

"அகர முதல எழுத் தெல்லாம்
முதற்றே யுலகு" [ஆதிபகவன்

என்று அகரத்தையே இறைவனுக்கு ஒப்பிட்டிருக்கின்றார்; திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெறிந்த குமரவேளும் அன்று அகத்தியனர்க்கு அறிவுறுத்தியதும் தமிழெழுத்தாகும்; தமிழ்த்தோத்திரங்களைச் செவியாரக் கேட்டுத் திருவுளம் மகிழ்வாராம் சிவபெருமான்; மொய்தாரணி குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பானும்; தமிழ் அக்கரங்கள் மந்திரமாகவும் அமைந்துள்ளன; இப்படியான மகத்துவங்களோடும் இன்னும் பல விசேடங்களோடுங் கூடிய தமிழ் மொழியை, தமிழ் அக்கரங்களைத் தமிழ் மக்களாகியநாங்கள் சிரமிசைக்கொண்டு வணங்கிப் பொன் போலப் போற்ற வேண்டிய தல்லவா முறை? நமது மூதாதையர் இன்றும் தெய்வத் தமிழென்று தமிழையும் தமிழ் அக்கரங்களையும் போற்றி வந்தார்களே! தமிழை முதன்முதன் மொழிந்தவர் இறைவனென்கின்றார்களே! இக்காலத்திலும் இங்குள்ள பலர், மனப் பூர்வமாகவோ, அல்லாமலோ, அதை நாம அறியேம், தமிழை வளர்க்கவேண்டும்; தாய் மொழியை விருத்திசெய்யவேண்டும் என்று வாய்ப்பறை யறைகின்றார்களே!

இப்படியெல்லாம் போற்றப்பட்டு வந்த தமிழ்மீது, பிற்காலத்தில் ஆங்கில மொழிமீது மூண்ட ஆர்வத்தினலும், அதுபலருக்கு ஊதியங் கொடுத்தமையினலும், அபிமானங் குறைந்துவிட, தாய்ப் பாஷையென்பதையும் மறந்து, தெய்வமொழி யென்பதையும் அயர்த்துத் தமிழ் மக்கள் பலர் இதனைப் போற்றாது அலட்சியஞ் செய்யத் தலைப்பட்டனர். தமிழைத் திருத்துகிறோம், இதற்குப் புத்துயிர் கொடுக்கிறோமென்று சொல்லிப் பழந்தமிழ்க்கிடையே பல விபரீதங்களையுங் கொண்டுவந்து புகுத்தினர்; தமிழ் மரபை அறவே மறந்து அதனைப் பங்கப்படுத்தினர்; தமிழிலுள்ள அக்கரங்களின் தொகை யதிகமாதலால், மேலைத்தேச மொழிகளிலுள்ளவாறு தமிழ் அக்கரங்களின் தொகையைக் குறைத்தல் வேண்டுமென்று முயற்சிப்பாராயினர்; இவைகளெல்லாம் பெரும்பான்மையுந் தென்னிந்தியாவில் நேர்ந்தவை; சிற்சில யாழ்ப்பாணத்திலும வந்து புகத்தலைப்பட்டன.

இவைகளைத்தாம் ஒருவாறு ஒரு தமிழ்மகன் சகித்துக்கொண்டிருந்தாலும், இப்பொழுது சில காலமாக இந்த யாழ்ப்பாணத்தி லுள்ளவர்கள் தமிழ் அக்கரங்கள் விஷயமாக்ச் செய்யும் ஒரு அக்கிரமம் சகிக்கத் தக்கதல்லவே! என்ன அக்கிரமம்? தமிழிலே ஏதும் விளம்பரஞ் செய்ய வேண்டுமானல், தெருவீதிகளிலுள்ள வீட்டுச்சுவர்கள், வேறு கட்டடங்களின் சுவர்களிலே பெரிய அக்கரங்களால் எழுதியும், இல்லையேற் பெரிய எழுத்திலே தாள்களில் அச்சிட்டுப் பசையிட்டு ஒட்டியும் வந்தார்கள்; அப்படிச் செய்ததையிட்டு நாம் ஒன்றுஞ் சொல்லவரவில்லை; ஆனல் இப்பொழுது என்ன செய்கிறார்கள்? இக் நகரில் விரைவில நேரவிருக்கும் வட்டார அங்கத்தவர் தேர்தலுக்கு அபேட்சகராக முற்பட்டு நிற்போர், தங்கள் திருநாமம் முதலிய பெருமைகளையும், தங்களையே தேர்தல் செய்ய வேண்டுமென்ற பிரார்த்தனையையும், தார்கொண்டு மெழுகப்பட்ட பெருந் தெருக்களிலும் சந்திகள் சதுக்கங்களிலும் வெள்ளை வர்ணத்தினலே தீட்டி, இல்லையேல் தீட்டுவித்து விடுகிறார்களே; இத் தெருவீதி வழியாற் போவாருடைய வெறுங்கால், செருப்புக்கால், மிதியடிக்கால், சப்பாத்துககால் எல்லாக் கால்களின் கீழுங்கிடந்து இந்தச் செந்தமிழ் - தெய்வத் தமிழ் அக்கரங்கள்மிதியுண்டுஉழக்குப்படுகின்றனவே! தமிழெழுத்தைக்காலால் மிதிக்கக்கூசும்பழைய மனிதர், படித்த மனிதர் இன்னும் பலர் இந்த நகரத்திலிருக்கிறார்களே! இவர்கள் தெருவழியே செல்வது பேரிடராகவிருக்கின்றதே! இந்தத் தமிழ் எழுத்துக்களுக்கு இப்படியான துரோகம் எந்தக் காலத்திலேனும் நடந்ததுண்டா? தமிழன் தன் தாய் மொழி யெழுத்துக்களைக் காலால் மிதிக்கும்போது அவனுடைய கால் கூசுமே! தாய் மொழி யெழுத்துக்களைத் தாமும் மற்றை யெல்லாருக் காலால் உழக்கச் செய்துவிட்டு, வட்டாரப்பிரதிநிதிகளாய் நகரசபையுட்புகுந்து இந்தப் பிரதிநிதிகள் தாய்மொழியின் பொருட்டு ஏதும் விருத்தி செய்வார்களா?

சென்ற ஆண்டில், இங்குள்ள செந்தமிழபிமானிகள், தென்னிந்திய தமிழ் நாட்டிலுள்ள தனித்தமிழபிமானிகளை இங்கே வரவழைத்துத் தமிழ்ப் பேர்விழாச் செய்தபோது, தமிழ்த்திருமுறைகள் பலவற்றை யானைமீது ஏற்றி வாத்தியம் வரிசைகள்சகிதமாகப்போற்றி விழாச் செய்து தமிழின் அருமை பெருமை தெய்வமணம் முதலியவற்றையெல்லாம் பற்றிப்பிரசங்கமுஞ் செய்தார்களே! பல்லாயிரக் கணக்கான தமிழபிமானிகள் போய் அப் பிரசங்கங்களைக் கேட்டார்களே! இந்தியாவிலிருந்து வந்த தமிழபிமானிகள் போய்விட, இங்குள்ள தமிழபிமானிகள் இந்த அக்கிரமத்தைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கலாகுமா?

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 27)

"உள்ளதைச் சொல்லுதிர்"

மகளுடைய சம்பந்த விஷயம் காலதாமசமாகின்றதே யென்பதைச் சொல்லிக் கவலைப்பட்டுவிட்டு, வனசாவின் தாய் தன் கருமம் பார்க்கப் போய்விட்டாள்; சிறிதுநேரஞ் சிந்தனைபோடிருந்த கமலாட்சி வனசாவைப் பார்த்து "தங்காய் கேட்கின்றேனென்று குறைவெண்ண வேண்டாம்; உமது மைத்துனருக்கும் உமக்கும விவாகம் விரைவில் நடக்குமென்ற சந்தோஷத்தினல். நீர் கவலை நீங்கி அகமும் புறமும் பூரித்து முகமலர்ச்சியோடு இருக்கிறீரென்று இப்பொழுது உம்மைக் கண்டவுடனே நான் எண்ணிச் சந்தோஷப்பட்டேன்; ஆனல் உங்கள விவாக விஷயமாக நான் இப்பொழுது உம்முடன் பேசியபோது, நீர், ஆனலென்ன, ஆகாவிட்டாலென்ன, நடந்தாலென்ன, நடவாவிட்டாலென்ன? எல்லாம் விதியின் செயல், என்று ஞானம பேசுகின்றீர்; இப்படி இப்பொழுது நீர் சொலவதற்குக் காரணமென்ன வென்பது எனக்குப் புலப்படவில்லை; என், தங்காய், விவாகத்தின்மீது ஊக்கஞ் செல்லவில்லையா? இல்லையேல் விவாகம் இனிமேல் வேண்டாமென்று வைராக்கியங் கொண்டுவிட்டீரோ, தங்காய், உம்மிடத்தில் அதிக விசுவாசமுள்ள எனக்கு உள்ளதைச் சொல்லுதிர்" என்று பரிவுடன் கேட்டாள் கமலா; கமலா சொன்னவற்றை யெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டு அவள் பக்கலில் இருந்த வனசா புன்னகை யரும்ப அவளை அன்புடன் பார்த்து, "அக்கா, சொல்லுகிறேன் எனபதையிட்டுக் கவலைப்படாதீர்கள்; இந்தப் பிரபஞ்ச வாழ்க்கை நிலையானதென்றும, இதில் மகிழ்ச்சியுண்டென்றும் என் சிறுபிள்ளைப் புத்தியினல் இவ்வளவு காலமும் எண்ணியிருந்து ஏமாந்துபோனேன்; நான் நினைத்தபடி யெல்லாம் நடக்குமென்று பேய்த்தனமாய் நினைத்திருந்தேன்; அத்தான என்னை மணந்துகொள்வாரென்றும, நான் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாகவிருந்து இனிது வாழலாமென்றும் ஆகாயத்திற் கோட்டை கட்டினேன்; இப்படியெல்லாம் நினைத்தமையினல் தீராக் கவலைக்கு ஆளாகி அன்னுகார உறக்கம் முதலிய சுகங்களின்றி மனமுடைந்தேன்; தேகம் மெலிந்தேன; சஞ்சலம் அதிகப்பட்டமையினல், நீடித்த காலம் மறந்திருந்த எங்கள குலதெய்வமாகிய விநாயகக் கடவுளை மனத்தில் எண்ணினேன்; வணங்கினேன், துதித்தேன; அப்பெருமான் எனமீது கடைக்கண் வைத்தார் போலும்; பிள்ளையாருக்குப் பூசை செய்யும் எங்கள் புரோகிதப் பிராமணரே விநாயகப்பெருமானருளால் எனக்கு ஞானகுருவாய் வந்து சேர்ந்தார்; என் கவலையை ஒருவாறு அவருக்குப் புலப்படுத்த அந்தப் புரோகிதர் எனைத் தேற்றி, குழந்தாய், உங்கள் குலதெய்வமாகிய கணபதியைக் கைதொழுதாற் கவலை முழுவதும் நீங்கும்; நினைத்த காரியஞ் சித்திக்கும் என்று இதோபதேசஞ் செய்தார்".

'ஆதலால் வானேரும்
ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை"

"நான் உடனே புரோகிதரைப் பணிந்து, சுவாமீ, விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களைப்பற்றியும, அவ்விரதங்களைக் காத்தலால் அடையக்கூடிய நன்மைகளைப் பற்றியும் சொல்லவேண்டுமென்று கேட்டேன்; புரோகிதர் அன்போடு அவை யனைத்தையும் எடுத்து விரிவாகச் சொன்னுர்; கேட்டேன், விரதங்களை இயன்றவரையிற் சிலதோடும நியதிகளோடும் அநுட்டித்து வருகிறேன்; எங்கள் வீட்டில் நின்றபடி அந்தப் பிள்ளையார்கோவில் துாபியைத் தரிசிக்கிறேன்; அக்கா, பிரணவப் பொருளாய் விளங்குகின்ற பிள்ளையாரின் திருவருட் பெருமையை நானும் அறியேன்; நீங்களும அறியீர்கள்; அந்தப் பெருமானுக்குரிய தோத்திரமொன்றைப் புரோகிதர் எனக்குப் படித்துக்காட்ட, நான் உடனே மனனம் பண்ணிக்கொண்டேன்; சொல்லுகிறேன் கேளுங்கள் அக்கா:

"திருவாக்குஞ் செய்கருமங்
கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்
— உருவாக்கும்
ஆதலால் வானேரும்
ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை".

என் அருமையான அக்கா, கருணைக் கடலாகிய கணேசன் பொறுப்பில் என்னை ஒப்புவித்து விட்டேன்;

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத்தொடர்ச்சி

அவன் செய்வதைக் கண்டுகொள்வேன்; அவன் தியானமே என்னுள்ளத்தில் வரும் ஆனந்தமாகும்; என்னை இல்வாழ்க்கையிற் புகுத்த வேண்டுமென்பது அவன் திருவுள்ளமாகிற் புகுத்திவிடுவான்; அதன்கட்புகாமல் என்னைத் தனக்குத் தொண்டு செய்ய வைத்து ஆட்கொள்வது அவன் திருவுள்ளத்திற்குச் சம்மதமானால் அப்படியே செய்வான்; நாம் முதல் வழிபடுங் கடவுளாகிய கணநாதனிருக்கும்போது எனக்கென்ன கலக்கம்? அக்கா, நீங்களும் அவனை அன்புடன் வழிபட்டு உங்கள் ஆன்ம லாபத்தை இனியேனுந் தேடப்பாருங்கள்" என்று கண்களில் ஆனந்த அருவி சொரிய நாத் தடுமாறப் பரவசப்பட்டுச் சொன்னாள் வனசாட்சி.

"பருவத்தே பயிர் செய்"

இவைகளையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த கமலாட்சி ஆச்சரியமடைந்தாள்; சற்று நேரம் யோசித்தாள்; கெடு நாட்பட்ட வேலை காரணமாகச் சிந்தனை மேலீட்டினால் என் தங்கை மனத்தில் வைராக்கியம் ஏற்பட்டுவிட்டதோ! இல்லையேற்சித்தப்பிரமையோ! என்று சந்தேகித்தாள்; அந்த அந்தக் காலத்திலே அந்த அந்தக்கருமத்தைச் செய்து வைக்காவிட்டால் இப்படி மாறுபாடுகள் நேருதலும் சகசந்தானே; அறியாமலா எங்கள் மூதாட்டி "பருவத்தே பயிர்செய்" என்று பாடிவைத்தாள்; வனசா சாமானியமானவளல்லள்; புத்திசாலி; இப்படிப்பட்ட இவளும் தன் மனத்தை யோடவிட்டு மாறுபட்டுக்கொண்டு நிற்கின்றாளே; இதற்கென்னசெய்யலாம்! இவள பெற்றோருக்கேனும், என்னண்ணருக்கேனும் இவள் நிலைமையை வெளிவிடுவது புத்தியாகாது எனத் தன்னுள்ளேயோசித்துக்கொண்டு "என் அருமைத் தங்காய், நீர் சொல்லுவதெனக்குப்புலப்படவில்லை" என்று கவலைகூரச் சொன்னாள்; "அக்கா, நான் சொல்வதில் ஏதும் பிழையிருந்தால் எடுத்துக் காட்டுங்கள்" என்று பதில் சொன்னாள் வனசா. பிழையொன்றேனும் எடுத்துக்காட்டமுடியாமற் சிந்தித்தபடி சிறிது நேரமிருந்தாள் கமலாட்சி. (வரும்)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

காலஞ்சென்ற காரைநகர் மேற்குத் தங்கோடை ஆறுமுகம் நாகேசபிள்ளையின் ஆதனத்திக்குத் தத்துவம்.

தத்துவ வழக்கு இல. 1108 மரணித்தவர்

காரைநகர் மேற்கு நாகேசபிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளை

தத்துவகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 1108-ம் இலக்கத் தத்துவவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1951-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

காரைதீவு மேற்கு தங்கோடை இறை கலியனை கிலப்பரப்பு ஆறு (6) செய்பயிர் வான்பயிர்களும் வீடுகளும் எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு சிதம்பரப்பிள்ளை காசிப்பிள்ளையும் பங்காளரும், தெற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லமுத்து. இதடங்கலும் மேற்சொல்லக் காணியில் வடகிழக்கு மூலையில் இருக்கிற இரண்டு குளியில் சொரியலாய் ஒரு குளியும் ஒரு பனையும் இணைந்துப் பங்கும்.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்மிஷனர்.

காரைநகர்
31-10-51.

M 129 6—11—51.

---

கடிதம்.

## பிரதம மந்திரிப் பதவிக்கு முதுமை தடையாகுமா?

ஐயா,

அண்மையில் ஆங்கிலேய நாட்டில் நிகழ்ந்த பாராளுமன்றத் தேர்தல் எங்கள் இலங்கை வாசிகளுக்கும் ஓர் முன்மாதிரியாக இருக்கும். திரு. ஜேர்ச்சில் தமது 76-வது வயதில் பாராளுமன்ற அங்கத்தவராய்த் தெரிவு செய்யப்பட்டது மல்லாமல், மிகவும் பொறுப்புவாய்ந்த பிரதம மந்திரி உத்தியோகத்தையும் பெற்றிருக்கின்றார். எங்கள் இலங்கைத் தேசத்தின் பிரதம மந்திரி திரு. சேனநாயகா திரு. ஜேர்ச்சிலிலும் பார்க்க 8 ஆண்டுகள் வயதாற் குறைந்தவர். திரு. சேனநாயகா உடல்நிலை (?) மன உறுதிகளை நோக்குமிடத்து அவர் இப்பொழுது வகித்துவரும் பதவிக்குத் தகுதி உடையவரெனவும், இன்னும் பல ஆண்டுகளுக்கு அப்பதவியை ஏற்று நடத்தத் தகுந்தவரென்றெண்ணலாகும். நம்நாட்டிற் சிலர் திரு. சேனநாயகா விருத்தாப்பியமடைந்து விட்டாரெனவும், அவர் தமது பிரதமர் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறி, ஓர் யௌவன புருஷனிடம் அப் பதவியை ஒப்படைக்க வேண்டுமெனவும் கூறுகிறார்கள். சனநாயக ஆட்சிமுறையிலும், வாக்குரிமையை உபயோகிக்கும் முறையிலும் அனுபவம் பெற்ற பிருத்தானிய வாக்காளர்கள் இப்பொழுது நடந்தொண்ட முறையை அவதானித்தால் இவர்கள் அங்ஙனம் கூறமாட்டார்கள்.

திரு. சேனநாயகா முதுமையடைந்துவிட்டபடியால் அவர் இளைப்பாற வேண்டுமென்று கூறுவது பொருந்தாது. அவரது அனுபவம் வாய்ந்த வயசு, அவர் ஆற்றிவரும் கடமையைத் தொடர்ந்து புரிவதற்கு மிகமிகத் தகுந்தவர் என்பதை வலியுறுத்தும். திரு. ஜேர்ச்சில் திரு. அட்லிக்குப் பதிலாகக் கடமையாற்றத் தெரிவு செய்யப்பெற்றிருக்கின்றார். எங்கள் நாட்டில் நிகழப்போகிற அடுத்த தேர்தலில், பெருந்தொகையான வாக்காளர்களால் திரு. சேனநாயகா தெரிவு செய்யப்பெற்றால், அவர் இப்பொழுது ஆற்றுகின்ற கடமையைத் தொடர்ந்து புரிவதாக முடியுமே யொழிய அவருக்கு அவ்வுத்தியோகம் புது நியமனமாகமாட்டாது.

முதுமை, அனுபவம், மக்களுடன் ஊடாடும் ஆற்றல், பாரபட்சமின்றி விவாதங்களைத் தீர்க்கும் சக்தி, பிறநாட்டு மக்களால் அளிக்கப்படும் மதிப்பு, இலங்கையிலுள்ள பல சமூகத்தவர்களும் கொண்டுள்ள விசுவாசம், நாட்டுக்கு நன்மை பயக்கும் அரசியற் கொள்கை, இலங்கையிற் பெருந் தொகையான மக்களாற் சனத் தலைவராக மதிக்கப்படுதல், பழைய மரபுகளையும், ஆசாரங்களையும், நன்குமதித்தல், தேசாபிமானம், ஆகிய இப்பண்புகள் யாவும் ஒரு தனிமனிதனிற் காணப்படுவது அருமை. ஆனால் மேற்கூறியவைகள் யாவும் எங்கள் பிரதம மந்திரியாரிடத்தில் காணப்படுகின்றன. இப்பொழுது அவர் தயநாட்டுக்கு எப்படித் திறமையாகத் தமது கடமையைத் தொடர்ந்து செய்ய அவருக்குச் சந்தர்ப்பமளித்து, உரியகாலம் வரும்பொழுது அவரை இளைப்பாற விடுவதே நம்நாட்டுமக்களின் கடமையாகும்.

சு சிவசுப்பிரமணியம்

156. கல்ஸ்டோப்
கொழும்பு

---

## சுருட்டுப் புகைத்தல்

சுருட்டுப் புகைத்தல் 'பஸ்' வண்டி முதலிய பிரசித்த பிரயாண ஊர்திகளிலும் பட மாளிகைகளிலும் தடுக்கப்படவேண்டுமா?

'பஸ்' வண்டி மின்சார வண்டி (Tram) முதலிய பிரசித்த பிரயாண ஊர்திகளிலும் படமாளிகைகளிலும் நாடக மண்டபங்களிலும் சுருட்டுப் புகைத்தல் தடுக்கப்பட வேண்டுமா என்பது சுகாதார மந்திரிச் சபையாரால் சிந்திக்கப்படுகிறது. கடிதப்பகுதி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாகிய திரு விக்ரர். இரத்நாயகாவால் இந்த ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

சுருட்டுப் புகைப்பதால் மக்களின் சுகாதாரத்துக்கு நேரும் அபாயத்தையும், சுருட்டுப் புகைக்காதோருக்கு உண்டாகும் இடைஞ்சலையும் உத்தேசித்துச் செய்யப்பட்ட இப்பிரேரணை பாராளுமன்ற அரசாங்கக் கட்சியாரால் ஏற்றுக்கொள்ளப்படலாயிற்று. ஐக்கிய அமெரிக்க நாட்டில் படமாளிகைகளிலும் 'பஸ்' வண்டிகளிலும் சுருட்டுப் புகைத்தல் அனுமதிக்கப்படுவதில்லையென்பதைச் சிலகாலத்துக்கு முன்தான் அந்நாட்டிற் பிரயாணம் பண்ணினபோது அறிந்ததாகத் திரு. இரத்நாயகா கூறினர்.

அவ்வாறே இலங்கையிலும் பகிரங்க இடங்களிற் சுருட்டுப் புகைத்தலைத் தடுத்து விட்டால் சுருட்டுப் புகைப்போர் சிலமணி நேரமாயினும் புகைத்தலைத் தவிர்த்திருக்கவேண்டிய கட்டுப்பாட்டை உண்டாக்குவதுமன்றிச் சுருட்டுப் புகைப்போரால் புகையாதோருக்குப் பொது இடங்களில் உண்டாகும் இடைஞ்சலையும் நீக்கிவிடலாமென திரு. இரத்நாயக்கா அபிப்பிராயப் படுகின்றார்.

---

## மெய்கண்டதேவ நாயனர் குருபூசை

நிகழும் ஐப்பசி மாதம் 14-ந்தேதி (30—10—51) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் தொண்டமனாறு செல்வச் சந்நிதித் திருமடத்தில் அடியார்கள் ஆதரவில் ஷெ குருபூசை நடைபெற்றது. அவ்வமயம் திரு. செ. கோவிந்தசாமி மெய்கண்டாரின் வாழ்க்கை வரலாறு பற்றிப் பேசினர். கூட்ட முடிவில் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது. — நிருபர்

---

## தொழிற்சாலை மீண்டுந் திறக்கப்படுகிறது

காத்தாண்டியாவிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலை சில மாதங்களாக மூடப்பட்டிருந்து. பின்மீண்டும்சென்றவாரம் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலை மூடப்பட்டபோது வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருந்த ஏறக்குறைய 300 தொழிலாளிகள் மீண்டும் வேலையில் அமர்த்தப்படுவார்களாம். தொழிற்சாலையின் சூளை அடுப்பைத் திருத்துவதற்காகவே வேலைநிறுத்தப்பட்டிருந்ததாம்; இப்போது அடுப்புத் திருத்தப்பட்டுவிட்டது. தொழிற்சாலையில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்பது இப்பகுதித் தலைவர்களாற் சில நாட்களுள் நிச்சயிக்கப்படுமாம். மேலும் நீர்கொழும்பிலுள்ள மட்பாண்டத் தொழிற்சாலையில் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டுச்சாலை புதுப்பித்துப்புதிய இயந்திரங்களும் நிறுவப்படுகின்றன. கீழ் மாகாணத்தில் காகிதத் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றமையால் காக்கா - பள்ளியிலுள்ள காகிதத் தொழிற்சாலை மட்டைத்தான் (card board உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக மாற்றி அமைக்கப்படுமாம்.

---

## திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபை

இச் சபையினது காரிய நிருவாக சபைக் கூட்டமொன்று அண்மையில் (?) உபதலைவர்களுள் ஒருவராகிய திரு. K. V. S. சுந்தரம் தலைமையில், பழைய பம்பலப்பிட்டிக் கதிரேசன் கோவிலில் நடைபெற்றது. இக்கியச் சிற்பாசாரியர்களிடமிருந்து ஷெ தேவாலயக் கட்டடப் படங்கள் கிடைத்திருப்பதாகக் காரியதரிசி சபையோருக்குத் தெரிவித்தனர். தனித்தனி ரூ 1001 கொடுத்துக் கட்டட நிதிக்கு உதவிய ஸ்ரீ. M. தம்பையாவும் அவரது பாரியாரும் ஸ்ரீ. N. நடராசாவும் அவரது பாரியாரும் ஷெ சபையினது சீவிய அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப் பெற்றனர். மேலும், கீழே குறிக்கப்பட்டிருப்பவர்களும் சபையினது அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப் பெற்றனர்.

செனெற்றர் S. R. கனகநாயகம்
மேயர் C. பொன்னம்பலம்
திரு. K. C. நடராசா
,, V. நாகலிங்கம்
,, C. M. முத்துக்குமாரு
,, V. பசுபதிப்பிள்ளை
,, M. மயில்வாகனம்,

ஷெ சபைக்குச் சொந்தமான திருக்கேதீச்சரத்திலுள்ள மட நிருவாகத்தைப்பற்றியும் மடஞ்சம்பந்தமான கடிதங்களை விசாரணை செய்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவும், ஒரு உபசபை நியமனஞ் செய்யப்பெற்ற பின் தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவெய்தியது. —நிருபர்.

---

## வாசகசாலைத் திறப்பு விழா

முகமாலை சனசமூக சேவாசங்க ஆதரவில் அமைக்கப்பட்ட வாசகசாலையைச் சென்ற புதன் கிழமை (31 - 10 - 51) மாலை பச்சிலைப்பளி, கரைச்சித் தொகுதிக் காரியாதிகாரி திறந்து வைத்துப் பேசினர். இப் பச்சிலைப்பளி கரைச்சிப்பகுதி கடவுளாலும் அரசினராலும் கைவிடப்பட்டுச் சீர்கேடான நிலையில் இருப்பதாகவும் சங்கங்களின் மூலமே இவற்றை மேல் நிலைக்குக் கொண்டுவர வேண்டுமெனவும், மக்களின் ஒற்றுமையும் தியாக உணர்ச்சியுமே வேண்டுமெனவும் அவர் கூறினர்.

அதன்பின் கொடிகாமம் நியாயதுரந்தரர் V S கார்த்திகேசு J. P. பேசுகையில் முகமாலை சகல செல்வங்களுடன் பெரிய மனுஷர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்ததெனவும் தற்போது காடடர்ந்து தேடுவாரற்றுக் கிலமாய்க் கிடக்கும் கட்டடங்களையே காணலாம் எனவும், இவற்றைப் பார்க்க வருத்தமாக இருப்பதாகவும், இத் தொகுதிப் பிரதிநிதியாலும், காரியாதிகாரியாலும் இத்தகைய சங்கங்களாலும் இப்பகுதி புனருத்தாரணஞ் செய்யப்பட வேண்டுமென்றுங் குறிப்பிட்டார்.

—நிருபர்.

---

## பௌத்தர்கள் நேருவுக்கு விண்ணப்பிக்கின்றனர்

ஆதிபுத்தரின் வாழ்க்கைச் சரித்திரத்தை அடிப்படையாகக்கொண்ட "பகவான்புத்தா" என்ற சரித்திரத்தைப் படமாக்காது தடுப்பதற்காக இந்தியபிரதமர் நேருவுடன் கலந்து ஆலோசிக்கும்பொருட்டு இலங்கையிலுள்ள ஓர் பௌத்த தாபனத்தின் பிரபல அங்கத்தினரொருவர் இந்த வாரம் இந்தியாவுக்குப் போவாராம். இப்படத்தை நடிப்பதையிட்டு பௌத்தருக்கிடையில் அபிப்பிராய பேதம் மூண்டுள்ளது. திரு. நேருவைக் காணச்செல்லும் இலங்கைப் பிரதிநிதி இப்படத்தை உண்டாக்க அனுமதிக்கப்படலாகாதென புத்தகர்களின் சார்பில் இந்திய பிரதமரைக் கேட்கப்போகிறாராம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு
1. காரைநகர் மேற்கு கனகர் சிவகுருவும் பெண்
2. ஷை. மாணிக்கமும்
வழக்காளிகள்.

இல- 7652

காரைநகர் வடக்கு கனகர் சங்கரப்பிள்ளை மைப்பெண் பாறுபதிப்பிள்ளை
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 7652 - ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகளை 1951-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 4563-89 இதில் ரூபா 4000/= க்கு 21 - 3 - 51 தொடக்கம் 27 - 6 - 51 வரைக்கும் வருட மொன்றுக்கு நூற்றுக்கு 7 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் 27 - 6 - 51 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் செலவு ரூபா 239-55½.

### காணிகளின் விபரம்

1. காரைதீவு தங்கோடை இறை கள்ளியம்பிட்டி செற்பரப்பு 15 எல்லை கிழக்கு பொன்னம்பலம் பெண் சிவகாமி, வடக்கு சந்தப்பு சேனுதிராசா, மேற்கு முருகேசு பெண் சரஸ்வதியின் உரிமைக்காரரும் சின்னப்பொடி தம்பிமுத்துவும், தெற்கு ஒழுங்கை இதடக்கனும்.

2. ஷை இறை முல்லைப்புலவு கிலப்பரப்பு 5 - க் தென்னைகளும் வீடுகளும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் முருகேசு சுப்பிரமணியமும், வடக்கு கந்தையா மைப்பெண் தங்கம்மா, மேற்கு சங்கரப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையும் தில்லையம்பலம் மைப்பெண் அபிராமியும், தெற்கு சண்முகம் இராமுவும் பெண் வள்ளியம்மையும் ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளையும் இதடக்கனும்.

ஆ. ச. கந்தையா,
A. S. Kandiah
கொம்மிஷனர்.

காரைநகர்
15-10-51.
M 130 6—11—51.

## சைவப் பிரசங்கம்

இந்த மாதம் 9-க்உ (26-10-51) வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் பிரமஸ்ரீ இ. சோமசுந்தரக் குருக்கள் "கந்தசஷ்டி விரதம்" என்னும் விஷயம்பற்றி காரைநகர், கருங்காலி ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் சிறந்த சைவப் பிரசங்கம் செய்துள்ளார்கள். ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானை நோக்கிச் செய்யப்படும் வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கந்த சஷ்டி விரதம் ஆகிய விரதங்களுள் கந்தசஷ்டி விரதமே சிறந்ததென்றும், ஆகையால் சைவசமயிகள் வெகு சிரத்தையுடன் அவ்விரதத்தை அநுஷ்டித்தல் பெருமானின் திருவருளைப் பெறுவதற்கு உறுதுணையானதெனவும் வற்புறுத்திப் பிரசாரகர் பேசினர். -கடித

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

## திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

திருச்சி புதன் நவம்பர் 7

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 கடலூர் எம் ஜயலக்ஷ்மி பாட்டு 8 ஆங்கிலத்திலசெய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 கடுத்தரப்பள்ளிகளுக்கு 1 கதம்பம்* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 கே எஸ் நாராயண ஐயங்கார் கோட்டுவாத்யம்* 2 தமிழில்செய்தி 2 10 இருவாத்ய இசை* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 நாகர்கோயில் ஜே. ஸாம்ராஜ் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 இசைச்செல்வம் 7 45 காஷ்மீரம்பேச்சு 8 வினைவில்விளையாட்டு நாடகம் 8 15 நாகர்கோயில் ஜே ஸாம்ராஜ் புல்லாங்குழல் 8 30 குரல்வளை* 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 டி வி ராமகிருஷ்ணன் பாட்டு 10 முடிவு.

திருச்சி வியாழன் நவ 8

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 டி எஸ் ஷண்முகசுந்தரம்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 காலைஇசை * 8 30 முடிவு.

12 30 கடுத்தரப்பள்ளிகளுக்கு 1 சித்ரகானம் * 1 15 பெண்ணுலகம் 1 30 இருகுரலிசை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 வயலின்* 2 தமிழில்செய்தி 2 10 தர்சனவில்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 ஜலதரங்கம் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 கோஷ்டிகானம் 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 திரைகானம்* 8 புதுமலர் பேச்சு 8 15 திவளூர் எஸ் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 டி எஸ் ஷண்முகசுந்தரம்பிள்ளை பாட்டு 10 முடிவு.

திருச்சி வெள்ளி நவ. 9

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 எம் எ பார்வதி அம்மாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 கடுத்தரப்பள்ளிகளுக்கு 1 கதம்பம் 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 வயலின்* 2 தமிழில்செய்தி 2 10 திமிர்பாரன் வாத்யகோஷ்டி 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 திருவாரூர் எஸ் பாலகிருஷ்ணன் நாகஸ்வரம் 5 45 இசைப் பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 நிரபதவிஞ நாடகம் 7 45 இலக்கியவாசகம் 8 எம் எ பார்வதிஅம்மாள்பாட்டு 8 30 குரல்வளை* 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 திருவாரூர் எஸ் பாலகிருஷ்ணன் நாகஸ்வரம் 10 முடிவு.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
குணிமார்க் ஓடுகள்
13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
Std 2
யாழ்ப்பாணம்

சாலாமிஸ்ரி லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல, புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உணடாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
கால்றுத்தல் விலைரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி; மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
எமதுவிலாசம் நி ⅓ தட்டாதெரு
M 92 கோட்டைமுனை, மட்டக்களப்பு

கடிதம்

## சைவக் குருமார்களைப் பயிற்றல்

சைவமக்களுடைய சமய அறிவையும், ஆத்மீக ஞானத்தையும் வளர்க்கக்கூடிய ஆற்றலுள்ள குருமார்கள் இருப்பது அத்தியாவசியகமாகும். இக்காலத்திலே நமது நாட்டில் அத்தகைய குருமார்களின் தொகை அருகி வருகின்றமையால் நம் சைவமக்களிடத்தில் சமய ஆர்வம் குறைந்து வருகின்றது. இக் குறையை நீக்குவதற்குச் சைவக் குருமார்களைப் பயிற்றும் கழகங்கள் காலதாமதமின்றி ஊர்கள் தோறும் நிறுவப்படல் வேண்டும். சமய போதகர்களின் சேவை தேவாலயங்கள், மடாலயங்கள், முதலிய ஸ்தாபனங்களுக்கு மாத்திரமல்லாமல் சைவக் குடும்பங்களினதும், தனிப்பட்ட மக்களினதும் சமய வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கும் தேவையாக இருக்கின்றது. இவ் விஷயத்தில் சைவசமயத்துக்கிருக்கின்ற ஆபத்து மிகப் பெரிது. சைவமக்கள் விழித்தெழுந்து சமயக்குருமார் பயிற்சிக் கழகங்களை ஸ்தாபிப்பதற்கு ஆவன அவசியம் செய்தல் வேண்டும். இவ் விஷயத்தில் இனிமேலும் காலம் தாழ்த்தினது எங்கள் சமயத்துக்குப் பெரும் தீமையை விளைவிப்பதாகும். பிராமணச் சிறுவர்களையும், சைவக் குரு மரபைச் சேர்ந்த சிறுவர்களையும், வடமொழிக் கல்வி, தமிழ்க் கல்வி, நன்கு கற்கச்செய்து, வேதாகம சாஸ்திரங்களை அவர்களுக்குப் போதித்துக் குருத்துவத்தொழிலைச் சிறப்பாகப் பயிற்ற வேண்டும்.

எங்கள் சைவசமயமானது, சைவமக்கள் கடவுளை வழிபட வேண்டுமென்றும், தங்கள் வாழ்க்கையைத் தெய்வீகத் தன்மை அடையச் செய்ய வேண்டுமென்றும், தங்கள் தினசரிக்கடமைகள்யாவும், சிவார்ப்பணமாக நடைபெறவேண்டு மென்றும் கூறுகின்றது. தகுதியான குருமாரில்லாதிருந்தால் சைவமக்கள இவ்வுண்மைகளை மறத்தல நேரிடும். குருமார் ஆலயங்களிலும், வீடுகளிலும், வேதசிவாகம முறைப்படி செய்யவேண்டிய போதனைகளையும், கிரிகைகளையும் செய்து வருவார்களானுல் விலைமதிக்க முடியாத இவ்வுண்மைகளைச் சைவ மக்கள ஒரு பொழுதும் மறக்கமாட்டார்கள்.

உங்கள் உண்மையுள்ள
கொழும்பு ச. சோமசுந்தரம்
18-10-51. சு. சிவசுப்பிரமணியம்.

ஏழாம் பாலபாடம்

இப்பாலபாடம் இப்பொழுது அவதாரிகை பரீட்சைஷ வினுக்கள் இலக்கண விளக்கம் வினுக்களென்னுமிவைகள் அநுபந்தமாகச் சேர்த்து வெளியிடப் படலாயிற்று.

விலை சதம் 90
மனேஜர்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday November 6, 1951